தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

| |
|---|
| நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)** |

மே, சூன் - **2017**

**P204** இதழியல்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. ஜான் விலிக்ஸ் நடத்திய இதழ் யாது?
2. செய்திக் கட்டமைப்பு என்றால் என்ன?
3. நாரா என்றால் என்ன?
4. விளம்பரப் பகுப்புகள் யாவை?
5. பன்னாட்டு உழைக்கும் இதழாளர் சங்கம் நடத்தை விதிகள் எந்த ஆண்டு வெளியிடப்பட்டது?
6. நேர்காணல் வெற்றியுடன் முடிக்க எவை தேவை என ஜேம்ஸ் நீல் குறிப்பிடுகிறார்?
7. தமிழகத்தில் வெளியிடப்பட்டு வரும் புலனாய்வு இதழ் இரண்டினைக் குறிப்பிடுக.
8. முதன் முதலில் செய்தித்தாள்களில் படம் விளியிடப்பட்ட முறை தோன்றிய ஆண்டு எது?
9. இதழ் வளர்ச்சிக்கு ஏனிப்படியாக விளங்குபவை எவை?
10. இதழாசிரியரின் கடமைகள் யாவை?
11. திரு.வி.க. நடத்திய இதழ்கள் யாவை?
12. தலையங்க அமைப்பில் முடிபு என்றால் என்ன?
13. எத்தனை இதழ்களில் நவீன வகை ஓவியங்கள் இடம்பெறுகின்றன?
14. இதழ்களில் எத்தகைய செய்திகளை வெளியிடக்கூடாது?
15. இக்கால இதழ்களில் நோக்கம் என்றால் என்ன?

## பிரிவு - 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. இந்திய இதழியல் மன்றம் விளக்க வேண்டிய கூறுகள் யாவை?
2. துணை ஆசிரியரின் வகைகளைப் பட்டியலிடுக.
3. இதழ் ஓவியங்கள் பற்றி குறிப்பு வரைக.
4. செம்மையாக்கக் குறியீடுகளை எழுதுக.
5. தொழில் இதழ்கள் பற்றி விளக்கி சான்று தருக.
6. வானொலியும் தொலைக்காட்சியும் எவ்வாறு செய்திகளை வெளியிடுகின்றன?
7. பக்க அமைப்பில் கையாளப்படும் உத்திகள் குறித்து எழுதுக.
8. எழுத்து வடிவம் பற்றி குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) இந்திய மற்றும் தமிழக இதழ்கள் வரலாறு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலையில் இதழ்களின் பங்களிப்பைக் கூறுக.

2. (அ) இதழியல் கலைச் சொற்கள் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) வெகுஜன இதழ்களின் அமைப்பு பற்றி விவரிக்க.

3. (அ) விளம்பர உத்தி, விளம்பரமும் சமூகமும், விளம்பரத்தின் இன்றைய நிலை இவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மொழி நடையும் திருத்தமும் குறித்து விவரிக்க.

***